உ

சிவமயம்.

அம்பலவாணக் கவிராயரவர்கள்

பாடிய

சதுரகிரி

அறப்பளீசுரசதகம்.

திருத்தமான பதிப்பு — இதன் விலை அணா 2.

இஃது,

பூண்டி,

ந. குப்புசாமி முதலியாரால்

சென்னை—சூளை:

“பிரின்ஸ் ஆவ் வேல்ஸ்” அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1910—௵

உ

சிவமயம்.

அறப்பளீசுரசதகம்.

காப்பு.

வெண்பா.

உம்பர்கோ னெம்பெருமா னேங்கறப்ப ளீசுரன்மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே—அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

உயர் பிறப்பு.

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுமிக்க
காட்சிபெறு நரசென் மமாய்க்
கருதப் பிறத்தலரி தினுமுயர் சாதியிற்
கற்புவழி வருத லரிது
வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினு மரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்ற லரிது
நெடியதன வானுத லரிததி னிரக்கமுள
நெஞ்சினோ னாத லரிது
நேசமுட னுன்பதத் தன்பனாய் வருதலிந்
நீணிலத் தினு மரிதாம்
அடியவர்க் கமுதமே மோழைபூ பதிபெற்ற
வதிபனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (க)

மணையாட்டி சிறப்பு.

கணவனுக் கினியளாய் ம்ருதுபாஷி யாய்மிக்க
கமலைநிக ரூப வதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோய்பழி யிலாததோர்
கால்வழியில் வந்த வளுமாய்
மணமிக்க நாணமட மச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்க வதியாய்
மாமிமா மர்க்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்பு பவளாய்
இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய்வந்தி
யெஞ்பெய ரிலாத வளுமா
யிரதியென வேலீலை புரிபவளு மாய்ப்பிறர்த
மில்வழி செலாத வளுமாய்
அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடைய
ளாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உ)

நன்மக்கட் பேறு.

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வரலுந்
தண்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
சாதக னெனப் படுதலும்
மங்குத லிலாததன் றந்தைதாய் குருமொழி
மறுதுவழி பாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்கா யுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியு
மீகையுஞ் சன்மார்க் கமு

மிவையெலா முடையவன் புதல்வனு மவனையே
  யீன்றவன் புண்ய வானும்
அங்கச விரோதியே சோதியே நீதிசே
  ரரசனெம தருமை மதவே
னனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
  ரறப்பளீ சுர தேவனே. (௩)

சகோதர ரொருமை.

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
  கொள்சுகந் தஞ்சுக மெனக் [கொள்
கொண்டுதாந் தேடுபொரு ளவர்தேடு பொருளவர்
  கோதில்புகழ் தம்புக ழெனத்
தேடுற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தவர்
  தீதிலவர் தவமா மெனச்
சீவனென் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
  சீறரவ மணிவாய் தொறும்
கூடுற்ற விரையெடுத் தோருட னிறைத்திடுங்
  கொள்கைபோற் பிரி வின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
  கூறுவது வேத தருமமாய்
ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே
  யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
  ரறப்பளீ சுர தேவனே. (௪)

சற்குரு வியல்பு.

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
  விவரவிஞ் ஞான பூர்ண
வித்யா விசேஷசற் குணசத்ய சம்பன்ன
  வீர வைராக்ய முக்ய

சாதா ரணப்பிரிய யோகமார்க் காதிக்ய
 சமாதிநிஷ் டானு பயராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பாதந்த்ர
 தருமமும் பர சமயமும்
நீதியி னுணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
 நிலைகண்டு பாச மிலராய்
நித்தியா னந்தசை தன்யரா யாசையறு
 நெறியுளோர் சற் குரவராம்
ஆதார மாயுயிர்க் குயிராகி யெவையுமா
 மமலவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. (௫)

நன்மாணுக்க ரியல்பு.

வைதாலு மோர்கொடுமை செய்தாலு மோசீறி
 மாறு திகழ்ந்தா லுமே
மனதுசற் றுகிலுங் கோணாது நாணாது
 மாதா பிதா வெனக்குப்
பொய்யாம னீயென்று கனிவொடும் பணிவிடை
 புரிந்துபொரு ளுட லாவியும்
புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
 போற்றிமல ரடியில் வீழ்ந்து
மெய்யாக வேபரவி யுபதேச மதுபெற
 விரும்புவோர் சற் சீடராம்
வினைவே ரறும்படி யவர்க்கருள்செய் திடுவதே
 மிக்கதே சிகரது கடன்
ஐயா புரம்பொடி படச்செய்த செம்மலே
 யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. (௬)

பொருள் செயல்வகை.

புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளைரட் சிக்க வேண்டும்
புத்தியுட னதுவொன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும்
உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரண
முடலிற் றரிக்க வேண்டு
முற்றபெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி
யோங்குபுகழ் தேட வேண்டும்
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டு முயர்மோக்ஷ
வழிதேட வேண்டு மன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம்
அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரு
மழகனெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எ)

தீவழி விலக்கு.

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொ ணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடையர்முன் னிற்கொ ணாது
கொஞ்சமே னுந்தீது செய்யொணா தொருவர்மேற்
குற்றஞ்சொ லொண்ணா தயற்
கோதையர்க ளோடுபரி காசஞ்செ யொண்ணாது
கோளுரைகள் பேசொ ணாது
நஞ்சுதரு பாவொடும் பழகொணா திருள்வழி
நடந்துதனி யேகொ ணாது

நதிபெருக் காகினதி னீஞ்சல்செய் யொண்ணாது
நல்வழி மறக்கொ ணாது
அஞ்சாம லரசர்முன் பேசொணா திவையெலா
மறியுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அ)

ஒன்றற்கொன் றழகுசெய்வன.

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்விகல் விக்கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடி லதற் கழகுதான்
தூயதவ மேன்மையுப காரம்விர தம்பொறுமை
சொல்லரிய பெரியோர் களைத்
தாழ்தல்பணி விடைபுரிதல் சீலநே சங்கருணை
சாற்றுமிவை யாமென்பர் காண்
சௌரிமல ரோனமரர் முனிவர்முச் சுடரெலாஞ்
சரணமெமை ரட்சி யெனவே
ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூ)

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவில்லா தவூர் நாசியில் லாமுகங்
கொழுநனில் லாத மடவார்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
குஞ்சர மிலாத சேனை

காவலில் லாதபயிர் பாலரில் லாதமனை
கதிர்மதி யிலாத வானங்
கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண்
காவல ரிலாத தேசம்
ஈவதில் லாததன நியமமில் லாதசெப
மிசைலவண மில்லா தவூ
ணிச்சையில் லாதபெண் போகநல மிவைதம்மி
னேதுபல னுண்டு கண்டாய்
ஆவியனை யாட்கிடந் தந்தவா கற்பதரு
வாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௦)

ஒன்றற்கொன்று தகாதசேர்க்கை.

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளை யருளிச் செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத மிடி வைத்தனை
நீதியகன் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறி மாதரைத் தந்தனை
நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர் வித்தனை
சாதியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்து பரவச்செய் தனை
தமிழருமை யறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம்பாட வேசெய் தனை
ஆதர விலாமலிப் படிசெய்த தென்சொலா
யமலவெம தருமை மதவே

ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௧)

குணக்கேட ரியல்பு.

மாருத கலைகற்று நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவனொரு பதர்
வாள்பிடித் தெதிரிவரி னோடிப் பதுங்கிடு
மனக்கோழை தானொரு பதர்
ஏரு வழக்குரைத் தனைவருஞ் சீசியென்
றிகழநிற் பானொரு பத
ரில்லாள் புறஞ்செலச் சம்மதித் தவளோ
டிணங்கி வாழ்பவ னொருபதர்
வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வானொரு பதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவு மனையாளை
விட்டுவிடு வானொரு பதர்
ஆருத துயரையு மிடிமையுந் தீர்த்தருள்செ
யமலவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௨)

செயத்தக்கவை.

வாலியந் தனில்வித்தை கற்கவேண் டுங்கற்ற
வழியிலே நிற்க வேண்டும்
வளைகட லிரிந்துபொரு டேடவேண்டுந்தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்க வேண்டுஞ்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டுங்கொண்டு
த்யாகங் கொடுக்க வேண்டும்

ஞாலமிசை பலதரும நாட்டவேண் டும்நாட்டி
நன்ருய் நடத்த வேண்டும்
நம்பனிணை யடிபூசை பண்ணவேண் டும்பண்ணி
ஞலுமிகு பத்தி வேண்டும்
ஆலமமர் கண்டனே பூதியணி முண்டனே
யனகவெம தருமை மதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கரு)

மேன்மே லுயர்ச்சி.

தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்திய முள புருடனுஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்று வோன்மிக்க
தரணிபுகழ் தரு தேவனும்
பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவிலிந்த்ரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்று
புண்ய வானே பிரமனும்
நன்மைதரு பதிஞயிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்ப வன் செங்கண்மா
ஞனுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகா தேவனும்
அன்மட்டு வார்குழலி பாகனே யேகனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கசு)

செயற்கருஞ்செயல்.

நீர்மே னடக்கலா மெட்டியுந் தின்னலா
நெருப்பை நீர்போற் செய்யலாம்

நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலா
நீளரவி னைப்பூண லாம்
பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்ச முடனே யுண்ணலாம்
பாணமொடு குண்டுவில கச்செய்ய லாமரப்
பாவை பேசப் பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்தி சற்று
மில்லாத மூடர்த மனத்தைத் திருப்பவே
யெவருக்கு முடியாது காண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா சுரர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௫)

உத்தமராவோர்.

செய்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
தீமையை மறந்த பேருந்
திரவியந் தரவரினு மொருவர்மனை யாட்டிமேற்
சித்தம் வையாத பேரும் [ளாளர்
கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொரு
கையிற் கொடுத்த பேருங்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
காத்தருள்செய் கின்ற பேரும்
பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிலைகொள் பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்மை யுரையாத பேரும்
ஐயவிங் கிவரெலாஞ் சற்புருடரென்றுலகி
லகமகிழ்வ ரருமை மதவே

ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கசு)

இதுவுமது.

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்கு
மவனே மகா புருடனு
மஞ்சாம லெதுவரினு மெதுபோகி னுஞ்சித்த
மசைவிலான் மகா தீரனும்
தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்ற
தோன்றலே மகா ராஜனுந்
தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகா மேருவாம்
அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த் திரட்சிக்கு
மவனே மகா த்யாகியா
மவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயு
மவனே மகா வுசிதனும்
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே லோலனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கஎ)

ஒன்றிலொன் றில்லாமை.

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மை யில்லை
சன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணை யில்லை
தாமெனு மயக்கறுத் தேவருகுபெரி யோர்க்குவரு
ஜாதிகுல மென்ப தில்லை [ரு
தாக்ஷிணிய முடையபேர்க் கிகலில்லை யெங்குமொ
சார்பிலார்க் கிடம தில்லை

பூமிக்கு ளீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தென்று மில்லை
புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாதவோர்
புருடருக் கொன்று மில்லை
யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே
யன்புடைய வருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கஅ)

யாக்கைநிலையாமை முதலியவை.

காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டி லாற்றின் பெருக்காங் [லாங்
கருணைதரு புதல்வர்கிளை மனைமனைவி யிவையெ
கானல் காட்டும் ப்ரவாகம்
மேயபுஜ பலவலுமை யிளமையழ கிவையெலாம்
வெயின்மஞ்ச ளுயிர் தானுமே
வெட்டவெளி தனில்வைத்த தீபமென வேகருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுட னேதெளிந் தன்பொடுன் பாதத்தி
னினைவுவைத் திருபோதிலு
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே யருள் புரிகுவாய்
ஆயுமறி வாளர்பணி பாதனே போதனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கசு)

திருமங்கை யிருப்பிடம்.

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மா மனையிலே

நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந் துளவிலே
கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயி றனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக் கதனிலே
பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர் பாவிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத் தின் சிரசிலே
அற்பெருங் கோதைமலர் மங்கைவா ழிடமென்ப
ரண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசது ரகிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௨0)

மூதேவி யிருப்பிடம்.

மிதமின்றி யன்னம் புசிப்போ ரிடத்திலு
மிகுபாஷை யோரி டத்தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யேதிரியு
மிக்க பாதக ரிடத்தும்
கதியொன் றுமிலர்போல மினங் கொளும்பழைய
கந்தையணி வோ ரிடத்துங்
கடிநா யெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனை யகத்தும்
ததிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சார்ந்தவாட் டின் றிரளிலுஞ்
சாம்பிண முகத்திலு மிவையெலாங் கவலைபுரி
தௌவைவா ழிட மென்பர்காண்

அதிரூப மலைமங்கை நேசனே மோழைசரு
மழகனென மதருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உக)

துணைதுணை மிரண்டினும் பயன்படாமை.

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டு மென்ன
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகி லென்ன
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகிலென்ன
மதுரமில் லாவுவர்க் கடனீர் கறுத்தென்ன
மாவெண்மை யாகி லென்ன
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படரா
துலர்ந்துதான் போகி லென்ன
வுதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
வோங்குமிடி வரி லென்னகாண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே
யாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உஉ

குறைவுற்றுங் குணங்கெடாமை.

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ்
சார்மணம் பழு தாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு
சார மதுரங் குறையுமோ
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி
னீள்குண மழுங்கி விடுமோ

நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
னிறையு மாற்றுக் குறையுமோ
கறைபட்ட பைம்புயன் மறைத்தாலு மதுகொண்டு
கதிர்மதி கனம் போகுமோ
கற்றபெரி யோர்மகிமை யற்பரறி கிலரேனுங்
காசினி தனிற் போகுமோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
யையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. (உகூ)

இதற்குதவிசெய்வ தீதுவெனல்.

வானவர் பிதிர்க்கண்முச் சுடர்மூவர் கோள்கட்கும்
வாழ்வுதரு முதவி புவனம்
வளமிக்க புவனந் தனக்குமன் மேலுதவி
வாழ்வுபெற் றிடு மன்னராம்
தேனமர் நறுந்தொடையல் புனைமன்ன வர்க்குதவி
சேர்ந்தகுடி படை வர்க்கமாஞ்
சேர்குடி படைக்குதவி விளைபயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்கு மழையாம
மேனிமிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தந் நீதி யொன்று
வேதிய ரொழுக்கமொன் றிம் மூன்றுமேயென்று
மிக்கபெரி யோருரைசெய்வார்
ஆனமர் நெடுங்கொடி யுயர்த்தவெம் மிறைவனே
யதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுர தேவனே. (உச)

இதனைக்கண்டு மகிழ்வ தீதுவெனல்.

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் றுளிப்ப
தவர்தந்த சந்ததிய தாஞ்
சந்த்ரோ தயங்கண்டு பூரிப்ப துயர்வாவி
தங்குபைங் குமுத மலராம்
புந்திமகிழ் வாயிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்கு தாமரை மலர்களாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தேநடம்
புரிவது மயூர வினமாம்
சிந்தைமகிழ் வாயுதவு தாதா வினைக்கண்டு
சீர்பெறுவ திரவலர் குழாம்
திகழ்நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெலா மென்பர் கண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உரு)

அதுவது வாகாமை.

உள்ளன் பிலாதபேர் தித்திக்க வேபேசி
யுறவாடு முறவு முறவோ
வுபசரித் தன்புடன் பரிமா றிடாதசோ
றுண்டவர்க் கண்ண மாமோ [ரு
தள்ளா திருந்துகொண் டொருவர்போய்ப் பார்த்துவ
தக்கபயிர் பயிரா குமோ
தளகர்த்த னொருவனில் லாமன்முன் சென்றிடுந்
தானையுந் தானை யாமோ
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்ப மாமோ

வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமு
மிக்கசீ வனமா குமோ
அள்ளா திருங்கருணை யாளனே தேவர்தொழு
மாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உசு)

நற்குணங்களுக் கிடமாகாதவர்.

வெறிகொண்ட மற்கடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப் புதவிலே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சந்மார்க்க மெள்ளளவு
மேவுமோ மேவாது போல்
குறைகின்ற புத்தியா யதிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமை யுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தான்மிக்க
குவலயர் தனி லவர்க்கு
நிறைகின்ற பத்தியுஞ் சீலமும் மேன்மையு
நிதானமும் பெரியோர் கண்மே
னேசமு மீகையு மிவையெலாங் கனவிலும்
நினைவிலும் வராது கண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (உஎ)

இதனு லின்னமுறையது மெனல்.

தன்னுன் முடிக்கவொண் ணுதகா ரியம்வந்து
தான்முடிப் போன் றமையனுந்
தன்றலைக் கிடர்வந்த போதுமீட் டெவுவோன்
ருய்தந்தை யென்ன லாகும்

ஒன்னார் செயுங்கொடுமை யானமெலிவு வந்தபோ
 துதவுவோ னிட்ட தெய்வம்
யுத்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரிய
 முரைப்பவன் குரு வென்னலாம்
எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
 யெண்ணிவரு வோன் பந்துவா
மிருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவ
 னெவனெனினு மவனே சுதன்
அந்நாரு மும்பணியு மெந்நாளு மேயுனையு
 மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே (உஅ)

அவரவரிடத்து நடக்குமுறை.

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்கனிவு
 மாறுத நல்லொ ழுக்கம்
மருவுகுரு வானவர்க் கினியவுப சாரமுள
 வார்த்தை வழிபா டடக்கம்
காதார் கருங்கண்மனை யாடனக் கோசயன
 காலத்தி னய பாஷணங்
கற்றபெரி யோர்முதியர் வருமாது லர்க்கெலாங்
 கருணைசே ரருள் விதானம்
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவிநய
 நெறியுடைய பேர்க் கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ் வுடன்பரிவு
 நேரல ரிடத்தில் வயிரம்
ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெம
 தையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுர தேவனே. (உகூ)

குணத்தைவிட்டுக் குற்றத்தைக் கவர்தல்.

துட்டவிகடக்கவியை யாருமே மெச்சுவார்
சொல்லுநற் கவியை மெச்சார்
துர்ச்சனர்க் ககமகிழ்ந் துபசரிப் பார்வருந்
தூயரைத் தள்ளி விடுவார்
இட்டமுள தெய்வந் தனைக்கரு திடார்கூறுப்
பெண்ணிலோ போய்ப் பணிகுவா
ரீன்றதாய் தந்தையைச் சற்றுமதி யார்வேசை
யென்னிலோ சாவில் வீழ்வார்
நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரி
னன்றாக வே பேசிடார்
நாளுமொப் பாரியாய் வந்தபுக் துறவுக்கு
நன்மை பலவே செய்குவார்
அட்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகா
ணத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூ0)

குணங்காண் குறி.

கற்றோர்க ளென்பதைச் சீலமுட னேசொலுங்
கனவாக்கி னாற் காணலாங்
கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு
காணடையி னுங் காணலாம்
அற்றோர்க ளென்பதனை யொன்றிலும் வாரா
வடக்கத்தி னா லறியலா
மறமுளோ ரென்பதைப் பூததயை யென்னுநிலை
யதுகண்டு தா னறியலாம்
வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினால்
விளையுமென் றே யறியலாம்

வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
விசேடத் தினு லறியலாம்
அத்தா குணத்தினுற் குலநலந் தெரியலா
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூக)

கூடிற்பயன்படல்.

செத்தைபல கூடியொரு கயிருயினது கொண்டு
திண்கரியை யுங் கட்டலாந்
திகழ்ந்தபல துளிகூடி யாருயின் வாவியொடு
திரளேரி நிறை விக்கலாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடி
னுடுத்திடுங் கலை யாக்கலா
மோங்கிவரு கோலுடன் சீலையுங் கூடினு
லுயர்கவிகை யாக் கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி டுமிகூடின்
மல்குமுளை விளை விக்கலாம் [வர்
மனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்கொரு
வாழின்வெகு வெற்றி பெறலாம்
அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூஉ)

அதுதற்கு வெற்றியிடம்.

கலைவலா ருக்கதிக சயமதுர வாக்கிலே
காமுகர்க் கதிக சயமோ
கைப்பொருளி லேவரு மருத்துவர்க் கோசயங்
கைவிசே டந் தன்னிலே

நலமுடைய வேசையர்க் கழகிலே யரசர்க்கு
நாளும் ரண சூரத்திலே
நற்றவர்க் கதிகசய முலகுபுகழ் பொறையிலே
ஞான வேதியர் தமக்கோ
குலமகிமை தன்னிலே வைசியர்க் கோசயங்
கூறிய துலாக் கோலிலே
குற்றமில் லாதவே ளாளருக் கோசயங்
குறையாத கொழு முனையிலே
அலைவில்குதி ரைக்குநடை வேகத்தி லதிகசய
மாமென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௯)

ஒன்றனில்லாமையாற் பாழ்படல்.

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண
சந்த்ரனிகர் முக சூனியஞ்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர் சூனியம்
மேம்பா டிலாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்க தேசச் சூனியம்
மிக்கசற் புத்திர னிலாததே நலமான
வீடுசேர் க்ரக சூனியம்
சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொல்லுயர் சபா சூனியந்
தொல்லுலகி லனைவர்க்கு மாநிதிய மில்லதே
சுத்த சூனிய மென்பர்காண்
ஆம்பல்வத னத்தனைக் குகனையீன் றருள்செய்த
வத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௧௪)

மூடர் தாரதம்மியம்.

பெண்புத்தி கேட்கின்ற மூடருந் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலு மூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது
பிதற்றிடும் பெருமூடரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில்செய் திடு மூடரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின் றுபின்புபோய்ப்
பரதவிக் கிடு மூடரும்
கண்கெட்ட மாடென்ன வோடியிர வலர்மீது
காய்ந்துவிழ்ந் திடு மூடருங்
கற்றறி விலாதமுழு மூடருக் கிவரெலாங்
கான்மூட ரரைமூடர் காண்
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩௫)

இதற்கிது வேண்டுமெனல்.

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
தம்புத்தி கேட்க வேண்டுந்
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசேகரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாகினுந் தன்னினுங்
கற்றோரை நத்த வேண்டுங்
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்திரி வேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகினுஞ்
சுதிகூட்ட வொருவன் வேண்டுஞ்

சுடர்விளக் காயினு நன்றாய் விளக்கிடத்
தூண்டுகோ லொன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
யையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩௬)

வறுமையின் கொடுமை.

மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
வெகுவித்தை கற்று மென்ன
மிக்கவதி ரூபமொடு சற்குண மிருந்தென்ன
மிகுமானி யாகிலென்ன
பாலான மொழியுடைய ளுயென்ன வாசார
பரனு யிருந்து மென்ன
பார்மீது வீரமொடு ஞானவா னுயென்ன
பாக்கிய மிலாத போது
வாலாய மாப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்த சுற்றமு மிகழுமே
மரியாதை யில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறு சொல்வாள்
ஆலால முண்டகனி வாயனே நேயனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩௭)

ஈனத்துவம்.

இரப்பவன் புவிமீதி லீனனவ னுக்கில்லை
யென்னுமவ னவனி லீன

னீகின்ற பேர்தம்மை யீயாம லேகலைத்
திடுமூட னவனி லீனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
யுதவிடா னவனி லீன
னுதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலு
முலுத்தனே வவனி லீனன்
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொலிப்
பலகா லலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
பாரிலெல் லோர்க்கு மீனன்
அரக்கிதழ்க் குமுதவா யுமைநேச னேயெளிய
ரமுதனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௩அ)

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்.

சென்மித்த வருடமு முண்டான வத்தமுந்
தீதில் கிரகச் சாரமுந்
தின்றுவரு மௌடதமு மேலான தேசிகன்
செப்பிய மகா மந்த்ரமும்
புன்மையவ மானமுந் தானமும் பைம்பொனணி
புனையு மடவார் கலவியும்
புகழ்மேவு மானமு மிவையொன்ப துந்தமது
புந்திக்கு ளேவைப் பதே
தன்மமென் றுரைசெய்வ ரொன்னார் கருத்தையுந்
தன்பிணியை யும் பசியையுந்
தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொருவர்
தஞ்செவியில் வைப்ப தியல்பாம்

அன்மருவு கண்டனே மூன்றுலகு மீன்றவுமை
யன்பனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூகூ)

தேவர்கள் காலவனவை.

சதுரயுக மோரிரண் டாயிரம் பிற்படிற்
சதுமுகற் கொரு தினமதாஞ்
சாற்றுமித் தினமொன் றி லேயிந்த்ர பட்டங்க
டாமு மீரேழ் சென் றிடும்
மதிமலியு மித்தொகையி னயனுயு ளுறுபோய்
மாண்டபோ தொரு கற்பமாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் றுனெடிய
மாறனக் கோர் தினமதாம்
துதிபாவு மித்தொகையி லொருகோடி நெடியமா
றுேன்றியே போய் மறைந்தா
றுேகையோர் பாகனே நீநகைத் தணிமுடி
துளக்கிடுங் கால மென்பார்
அதிகமுள பலதேவர் தேவனே தேவர்கட்
கரசனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சo)

தூய்மையிடமும் தூய்மை செய்வனவும்.

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
மறையவர்க் குயர் புனிதமோ
மலரடியி லேபுனித மொளிகொள்கண் ணுடிக்கு
மாசின் றுற் புற மதனிலே
மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
மிக்கமட மாத ருக்கோ

மேனியெல் லாம்புனித மாகுமா சௌசமொடு
மேவு வனிதையர் தமக்கும்
தாம்பிர மதற்குமிகு வெள்ளிவெண் கலமயந்
தங்க மீயந் தமக்குந்
தரும்புனிதம் வருபெருக் கொடுபுளி சுணஞ்சாம்பல்
சாருமண் டாது சாணம்
ஆம்புனித மிவையென்பர் மாமேரு வில்லியே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சக)

அடங்காதவற்றை யடக்குமுபாயம்.

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங் கயிறென்று
கோர்த்துவச விர்த்தி கொள்வார்
குவலயந் தனின்மதக் களிறதனை யங்குசங்
கொண்டுவச விர்த்தி கொள்வார்
படியில்விட வரவைமந் திரதந் திரத்தினாற்
பற்றிவச விர்த்தி கொள்வார்
பாய்பரியை நெடியகடி வாளமது கொடுநடை
பழக்கிவச விர்த்தி கொள்வார்
விடமுடைய துட்டரைச் சோர்பந்து கைக்கொண்டு
வீசிவச விர்த்தி கொள்வார்
மிக்கபெரி யோர்களுங் கோபத்தை யறிவால்
விலக்கிவச விர்த்தி கொள்வார்
அடியவர் துதிக்கவரு செந்தா மரைப்பதத்
தையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சஉ)

ஒளியினுயர்வு.

செழுமணிக் கொளியதன் மட்டிலே யதினுமோ
செய்யகச் சோத மெனவே
செப்பிடுங் கிருமிக்கு மிச்சமொளி யதனினுந்
தீபத்தி னொளி யதிகமாம்
பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம்
பகல்வர்த்தி யதி லதிகமாம்
பாரமத் தாப்பினொளி யதிலதிக மதினுமோ
பனிமதிக் கொளி யதிகமாம்
விழைவுதரு பருதிக்கு மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிக ருக்கும்
மிக்கவொளி திசைதொறும் போய்விளங் கிடுமென்ன
வீரகுளோ ருரை செய்குவார்
அழல்விழிகொ டெரிசெய்து மதனவே டனைவென்ற
வண்ணலே யருமை மதவே
ளனுதின மு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுக)

குணங்குற்றமறிதல்.

வான்மதியை நோக்கிடிற் சோரர்கா முகருக்கு
மாருத வல் விடமதாம்
மகிழ்நன் றனைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக் கோ விடமதாம்
மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபோக் கதிக விடமாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க் கெலாம் விடமதாம்
ஈனமிகு புன்கவிவ லோர்க்கதிக சபைகாணி
லேலாத கொடிய விடமா

மேற்றமில் லாதபடு பாவிகட் கறமெண்ணி
லெந்நாளு மதிக விடமாம்
ஆனதவ யோகியர்க ளிதயதா மறையுறையு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௪௪)

உயர்வன்றித் தாழ்வும் சிறக்குமிடம்.

வெகுமான மாகிலும் மவமான மாகிலும்
மேன்மையோர் செய்யி லழகாம்
விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யி லழகாம்
தருதாழ்வு வாழ்வுவெகு தருமங்க ளச்செய்து
சாரிலோ பேரழக தாஞ்
சரீரத்தி லோரூன மானமெது வாகிலுஞ்
சமர்செய்து வரி லழகதாம்
நகமேவு மதகரியி லேரினுந் தவறினு
நாளுமது வோரழக தாம்
நாய்மீதி லேறினும் வீழினுங் கண்டபேர்
நகைசெய்தழ கன் றென்பற்காண்
அகமாயு நற்றவர்க் கருள்புரியு மையனே
யாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௪௫)

நல்வினை செய்தோர்.

சரணெனக் காத்தவன் மெய்யினுல் வென்றவன்
றனமிளையா துதவினோன்
றந்தைசொன் மறுதவன் முன்னவற் கானவன்
றுய்பழி துடைத்த நெடியோன்

வருபிதிர்க் குதவினேன் றெய்வமே துணையென்று
மைந்தன் மனைவியை வதைத்தோன்
மாறான தந்தையைத் தமையனைப் பிழைகண்டு
மாய்த்துலகின் மகிமை பெற்றோன்
கருதரிய சிபியரிச் சந்திரன் மாபலி
கணிச்சியோன் சுமுத்திரை சுதன்
கருடன் பகீரத னுடன்சிறுத் தொண்டனொடு
கானவன் பிரக லாதன்
அரியவல் விபீஷணன் மெனுமகா புருடரா
மத்தனே யருமை மதவே
ளனு தினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௬)

தீவினை செய்தோர்.

வாயிகழ்வு பேசிமிகு வாழ்விழந் தோன்சிவனை
வைதுதன் றலை போயினோன்
மற்றொருவர் தாரத்தி லிச்சைவைத் துடலெல்லா
மாறாத வடுவாயி னோன்
தாயத்தி னோர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திழந்து மாய்ந்தோன்
றக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினாற்
றந்திவடி வாய லைந்தோன்
மாயனைச் சபயதனி னிந்தனைசெய் தொளிகொணவ
மணிமுடி துணிந்து மாய்ந்தோன்
வருநகுட னொடுதக்க னயிராவ தன்குருடன்
மகன்வழுதி சிசு பாலனும்
ஆயிமறி வாளரொடு தேவர்பணி தாளனே
யவனிபுக ழருமை மதவே

ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬எ)

நன்னகர்.

வாவிபல கூபமுட னாறருகு சேர்வதாய்
மலைகாத வழியி லுளதாய்
வாழைகமு கொடுதெங்கு பயிராவ தாய்ச்செந்நெல்
வயல்கள் வாய்க்கால்க ளுளதாய்
காவிகம லங்குவளை சேரேரி யுள்ளதாய்க்
கனவர்த்த கர்கண் மறைவலோர்
காணரிய பலகுடிக ணிறைவுள்ள தாய்நல்ல
காவல ணிருக்கை யுளதாய்த்
தேவரா லயமாடல் பாடலணி மாளிகை
சிறக்கவுள தாய்ச் சற்சனர்
சேருமிட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
சீவனமு மேகி டைத்தால்
ஆவலொ டிருந்திடுவ தேசொர்க்க வாசமென்
றறையலா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬அ)

தீநகர்.

ஈனசா திகள்குடி யிருப்பதாய் முள்வேலி
யில்வில்லி னுக்கு முளதா
யிணைமுலை திறந்துதன் தலைவிரித் திடுமாத
ரெங்குநட மாட்ட முளதாய்க்
கானமொரு பக்கமாய் மலையோர மாய்முறைக்
காய்ச்ச றப்பாத விடமாய்க்
கள்ளர்பய மாய்நெடிய கயிறிட்டிறைக்கின்ற
கற்கேணி நீருண் பதாய்

மானமில் லாக்கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டா னதாய்
மாநிலத் தோர்தல மிருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதிலு மரு நரகிலே
ஆனநெடு நாள்கிடந் தமிழ்தலை சுகமாகு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௪௯)

முழுக்குநாள்

வருமாதி வாரந் தலைக்கெண்ணெ யாகாது
வடிவமிகு மழகு போகும்
வளர்திங்க ளுக்கதிக பொருள்சேரு மங்கார
வாரந் தனக் கிடர்வரும்
திருமேவு புதனுக்கு மிகுபுத்தி வந்திடுஞ்
செம்பொனுக் குய றிவுபோந்
தேடிய பொருட்சேத மாம்வெள்ளி சனியெண்ணெய்ச்
செல்வமுண் டாயுளுண்டாம்
பரிகார முளதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கான செழுமண்
பச்சறுகு பொன்னவற் காபெருத் தூளொளிப்
பார்க்கவற் காகு மெனவே
அரிதா வறிந்தபே ரெண்ணெய்சேர்த் தேமுழுக்
காடுவா ரருமை மதவே
ளனுதினமு வனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௫௦)

மருத்துவன்.

தாதுப் பரீக்ஷைவரு காலதே சத்தொடு
சரீர லட்சண மறிந்து

தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தமது வாகட மறிந்து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடு பஸ்பம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குண வாகடம்
சோதித்து மூலிகா விதநிகண் டுங்கண்டு
தூய தைலம் லேகியஞ்
சொல்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயந்
தோற்றியே யமிர்த கரமாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடையனு யுயர்வேத
னுகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௧)

உண்மை யுணர்குறி.

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய
சூழ்கிரக ணஞ்சாட் சியாஞ்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
தூய மாத்திரை சாட்சியாம்
ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென்பதற்
காளடிமை யேசாட் சியா
மரிதேவ தேவனென் பதையறிய முதனா
லரிச்சுவடி யேசாட் சியாம்
நாதனே மாதேவ னென்பதற் கோருத்ர
நமகசம கஞ்சாட் சியாம்
நாயேனை ரட்சிப்ப துன்பார மரியயன்
னுளுமர்ச் சனைசெய் சரணத்

தாதிநா யகமிக்க வேதநா யகனுன
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௫௨)

பிறவிக்குண மாறுமை.

கலங்காத சித்தமுஞ் செல்வமுஞ் ஞானமுங்
கல்வியுங் கருணை விளைவுங்
கருதரிய வடிவமும் போகமுந் தியாகமுங்
கனரூப முள மங்கையும்
அலங்காத வீரமும் பொறுமையுந் தந்திரமு
மாண்மையு மமுத மொழியு
மானவிச் செயலெலாஞ் சனனவா சனையினு
லாகிவரு மன்றி நிலமேல்
நலஞ்சேரு மொருவரைப் பார்த்தது பெறக்கருதி
னண்ணுமோ ரஸ்தாளி தன்
னற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராது காண்
அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௫௩)

ஊழ் வலி.

கடலள வுரைத்திடுவ ரரிபிரம ருருவமுங்
காணும் படிக் குரைசெய்வார்
காசினியி னளவுபிர மாணமது சொல்லுவார்
காயத்தி னிலைமை யறிவார்
விடலரிய சீவநிலை காட்டுவார் மூச்சையும்
விடாமற் றடுத் தடக்கி

மேன்மேலும் யோகசா தனைவிளைப் பாரெட்டி
விண்மீதி னுந்தா வுவார்
தொடலரிய பிரமநிலை காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தி யறிவார்
சூழ்வினை வரும்பொழுது சிக்கியுழல் வாரது
துடைக்கவொரு நான் முகற்கும்
அடைவல வெனத்தெரிந் தளவில்பல நூல்சொல்லு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருச)

ஒப்புயர் வில்லாமை.

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக
மேருவுக் கதிக மலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடு நதியும்
சோதிதரு மாதவர்க் கதிகமாங் காந்தியுஞ்
சூழ்கனற் கதிக சுசியுந்
தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
சுருதிக் குயர்ந்த தலையும்
ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுநக
ரன்ன தானந் தனிலுமோ
ரதிகதா னமுமில்லை யென்றுபல நூலெலா
மாராய்ந்த பேருரை செய்வார்
ஆதவன் பிரமன்விண் ணவர்முனிவர் பரவவரு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருரு)

வீண்செயல்.

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
விரும்புவோ ரவரின் வீணர்
விருந்துகண் டில்லா டனக்கஞ்சி யோடிமறை
விரகிலோ ரவரின் வீணர்
நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடியவர் மேர்கவி சொல்வார்
நானிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நரரைச் சுமக்கு மெளியோர்
தேட்டறிவி லாதபெரு வீணரே யவரினுஞ்
சேரொரு வரத்து மின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணுய்த்
திரியுமெளி யேனை யாட்கொண்
டாட்டஞ் செயும்பதாம் புயமுடியின் மேல்வைத்த
வமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௫௬)

உதவியின்றிக் கேடுவன.

மூப்பொருவ ரில்லாத குமரிகுடி வாழ்க்கையும்
மூதர ணிலாத நகரும்
மொழியும்வெகு நாயகஞ் சேரிடமும் வருமெது
மோனையில் லாத கவியும் [கை
காப்பமை விலாததோர் நந்தவன மும்நல்ல
கரையிலா நிறை யேரியுங்
கசடறக் கற்காத வித்தையு முபதேச
கார ணிலாத தெளிவும்
கோப்புள விநோதமுடை யோருக்கு புகழாத
கோதையர்செய் கூத்தாட்ட மும்
குளிர்புன னிறைந்துவரு மாற்றோர மதினின்று
கோடியர்ந் தோங்கு தருவும்
ஆப்பதில் லாததே ரிவையெலா மொன்றுகு
மையனே யருமை மதவே

ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருஎ)

இவையே போதுமெனல்.

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
பூவலஞ் செயவேண் டுமோ
பொல்லாத கொலைகள விலாதநன் னெறியுளோர்
புகழறஞ் செயவேண் டுமோ
நையாத காமத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செயவேண் டுமோ
நன்மனோ சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந் திடவேண் டுமோ
மெய்யாநி னடியரைப் பரவுவோ ருன்பதம்
விரும்பிவழி படவேண் டுமோ
வேதியர் தமைப்பூசை பண்ணுவோர் வானவரை
வேண்டியர்ச் சனைசெய் வரோ
ஐயா றுடன்கமலை சோணு சலந்தில்லை
யதிபனே யருமை மதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (ருஅ)

அரிய ராவோர்.

பதின்மரி லொருத்தர்சபை மெச்சிடப் பேசுவோர்
பாடுவோர் நூற்றி லொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்ர சங்க மிடுவோர்
இதனருமை யறிகுவோர் பதினு யிரத்தொருவ
ரிதையறிந் திதய மகிழ்வா
லீகின்ற பேர்புவியி லேயருமை யாகவே
யிலட்சத்தி லேயொருவ ராம்
துதிபெருக வருமூன்று காலமு மறிந்தமெய்த்
தூயர் கோடியி லொருவராந்
தொல்லுலகு புகழ்காசி யேகாம் பரங்கைலை
சூழுமவி ஞசி பேரூர்

அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௫௯)

கற்பு மேம்பாடு.

தன்கணவ னுருவமாய்த் தற்புணர வந்தோன்
றனக்கிணங் காத நிறையா
டழற்கதி ரெழாமலும் பொழுதுவிடி யாமலுஞ்
சாபங் கொடுத்த செயலாள்
மன்னிவள ரழன்மூழ்கி யுலகறிய வேதனது
மகிழ்நனைச் சேர்ந்த பரிவாள்
மைந்தனைச் சுடமந்த விறைவன் றடிந்தவடி
வாண்மாலை யான கனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவா ரழன்மூழ்கி
நாயகனை மேவு தயவா
ணனிலம் புகழ்சாவி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல்வை தேகி
அன்னமென வருசந்த்ர மதிதுரோ பதியென்ப
ராதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௦)

கோடி யுடிக்குநாள்.

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற்
கட்டலாம் புதிய சீலை
கலைமதிக் காகாது பலகாலு மழையினிற்
கடிதுனை வுற்றெ ழிதரும்
குறைபடா திடர்வரும் வீரியம போமரிய
குருதிவா ரந்த னக்குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியிற்
குருவார மதி லணிந்தால்
மறைபடா தழகுண்டு மேன்மேலு நல்லாடை
வருமினிய சுக்கி ரற்கோ

வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியர்க்கு
வாழ்வுபோ மரண முண்டாம்
அரைகின்ற வேதாகம மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௧)

சகுனம்.

சொல்லரிய கருடன்வா னரமரவ மூஞ்சூறு
சூகரங் கீரி கலைமான்
றுய்யபா ரத்வாச மட்டையெலி புன்கூகை
சொற்பெருக மருவு மாந்தை
வெல்லரிய கரடிகாட் டான்பூனை புலிமேல்
விளங்குமிரு நாவு டும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்
ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்க
லொருதுடை யிருத்தல் பற்ற
லொருதும்ம லாணையிட லிருமல்போ கேலென்ன
வுபசுருதி சொல்லிவை யெலாம்
அல்லறரு நல்லவல வென்பர்முதி யோர்பரவு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே (௬௨)

இதுவுமது,

நரிமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகொக்கை
நாவிசிச் சிவியோங் கிதான்
நரையான் கடுத்தவாய்ச் செம்போத் துடன்மேதி
நாடரிய சுரபி மறையோர்
வரியுழுவை முயலிவை யனைத்தும்வல மாயிடின்
வழிப்பயண மாகை நன்று
மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல்வா வாவென் றிடல்

தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை யொலிவல் வேட்டுத்
தனிமணி முழக்கெழுத லிவையெலா மூர்வழி
தனக்கேக நன்மை யென்பார்
அருணகிர ணோதயத் தருணபா னுவையனைய
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுரு)

இதுவுமது.

தலைவிரித் தெதிர்வருத லொற்றைப் பிராமணன்
றவசி சன்னுசி தட்டான்
றனமிலா வெதுமார்பி மூக்கறைபுல் விறகுதலை
தட்டைமுடி மொட்டைத் தலை
கலன்கழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான்
கதித்ததில தைல மிவைகள்
காணவெதிர் வரவொணு நீர்க்குட மெருக்கூடை
கனிபுலா லுபய மறையோர்
நலமிகு சுமங்கலை கிழங்கு சூதகமங்கை
நாளும் வண்ணு னழுக்கும்
நசைபெருகு பாற்கலச மணிவளையன் மலரிவைக
ளுடியெதிர் வர நன்மையாம்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய் பரசணியு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுசு)

உணவில் விலக்கு.

கைவிலைக் குக்கொளும் பாலசப் பால்வருங்
காராக் கரந்த வெண்பால்
காளான் முருங்கைசுரை கொம்படி பழஞ்சோறு
காந்திக் கரிந்த சோறு
செவ்வையில் சிறுக்கீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லமலா வகஞ்

சீரிலா வெள்ளுள்ளி யீருள்ளி யிங்குவொடு
சிறப்பிலவெண் கத்த ரிக்காய்
எவ்வமில் சிவன்கோயி னிர்மாலி யங்கிரண
மிலகுசுட ரில்லா தவு
ணிவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
வெனப்பழைய நூலுரை செயும்
ஐவகைப் புலன்வென்ற முநிவர்விண் ணவர்போற்று
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுரு)

நற்பொருளிற் குற்றம்.

பேரான கங்கா நதிக்குமதன் மேல்வரும்
பேனமே தோஷ மாகும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷ மாகும்
சீரான் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷ மாகுந்
தீதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்வதவர் மேற்றோ ஷமாம்
தாராள மாமிகத் தந்துமீளார் தாராமை
தானிரப் போர் தோஷமாஞ்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
தாலஞ்செய் தோஷ மாகும்
ஆராயு மொருநான் மறைக்குமெட்ட டாதொளிரு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுசு)

மனைகோல்வதற்கு மாதம்.

சித்திரைத் திங்கடனின் மனைகோல மனைபுகச்
செல்வமுண் டதினு நலமே
சேரும்வை காசிக்கு மேனு ளரன்புரர்
தீயிட்ட தானி யாகா

வெற்றிகொ ளிராகவன் றேவிசிறை சேர்கடகம்
வீறல்ல வாவணி சுகம்
மேவிடுங் கன்னியிர ணியன்மாண்ட தாகாது
மேன்மையுண் டைப்ப சிக்கே
உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியி
லோங்கு பாரதம் வந்தநா
ளுயர்வுண்டு மகரத்தின் மாசிமா தத்தில்விட
மும்பர்கோ னுண்ட தாகா
தத்தநீ மாரனை யெரித்தபங் குனிதானு
மாகுமோ வருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுள)

விருந்து வாரம்.

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொருவர்
செய்யொணு துண்ணுணுது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந் தருந்தார்
பொங்குபுத னன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிக பகையாம்
புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்ப்
போன வுறவுந் திரும்பும்
மங்குனிகர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்த விடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்தநா ளென்ற றியலாம்
அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுஅ)

பூப்பு வாரம்.

அருக்கனுக் கதிரோகி யாவனற் சோமனுக்
கானகற் புடைய ளாவா

ளங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
யளவில்லைங் குழவி பெறுவாள்
திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்தினொடு
சிறுவரைப் பெற்றெ டுப்பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாந்
திருவுமுண் டாயி ருப்பாள்
கருத்தழிந்தெழில்குன்றிவ றுமைகொண்டலைகுவாள்
காரிவா ரத்தி லாகில்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல னென் றுரைசெய்வார்
அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (சுகூ)

பூப்பிலக்கினம்.

வறுமைதப் பாதுவரு மேடத்தி லிடபத்தின்
மாருது விபசா ரியாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னங்கடகம்
வலிசினிற் பிறரை யணைவாள்
சிறுமைசெயு மிடிசேர்வண் மிருகேந் திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னி யென்னில்
செட்டுடைய துலையெனிற் பிணியான்மெலிந்திடுவ
டேளினுக் குத்த னுசெனில்
நெறிசிதைவள் பூருவத் தபரநெறி யுடையளா
நீண்மகர மான மிலளா
நிறைபோக வதிகும்ப மெனின்மீன மென்னிலோ
நெடியபே ரறிவு டையளாம்
அறிவாளர் மடமாதர் தமையறியி ராசிபல
னதுவென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எ0)

தீவுங் கடலும்.

நாவலந் தீவினைச் சூழ்கருங் கடலளவு
லட்சம் யோசனை யிதனையே
நாடொறுஞ் சூழ்வதில வந்தீ வதைச்சூழ்த
னற்கழைச் சாற்றின் கடல்
மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தன்
மிகுமதுக் கட லதனையே
விழைவொடுஞ் சூழ்தல்கிர வுஞ்சதீ வம்மிதனின்
மேற்சூழ்த னெய்க் கடலதாம்
பூவிலிது சூழ்தல்சா கத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற் கடல்
போதவது சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரி யப்பாலு மப்பால்
ஆவலுறு புட்கரத் தீவா மிதைச்சூழ்வ
தரும்புனற் றருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எக)

மேலான பொருள்.

சுழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
துரகமோர் மாணிக் கமாஞ்
சூழ்புவிக் கரசனு யதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக் கமாம்
பழுதற்ற வதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக் கமாம்
பலகலைகள் கற்றறி யடக்கமுள பாவலன்
பாற்கிலோர் மாணிக் கமாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே தியாகியா
முசிதனோர் மாணிக் கமா
முத்தம குலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடையனோர் மாணிக் கமாம்
அழிவற்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமை மதவே

ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எ௨)

உண்டி யிலையும் முறையும்.

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப்பலாத் தெங்கு பன்னீர்
மாசிலமு துண்ணலா முண்ணாத வோவரசு
வனசஞ் செழும் பாடலம்
தாழையிலை யத்தியா லேரண்ட பத்திரஞ்
சகதேவ முண் முருக்குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொ ணாதால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பல வருந்தல்
சற்றுண்டன் மெத்தவு ணித்தலையு மெய்ப்பிணி
தனக்கிட மெனப் பருகிடார்
ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலக
ஞகுமெம தருமை மதவே
ள னுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எ௩)

கவிஞர் வறுமை.

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
யிணையிலாச் சேட னென்று
மீவதில் லாதகன லோபியைச் சபையதனி
லிணையிலாக் கர்ண னென்றும்
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மார னென்று
மாயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
யாண்மைமிகு விஜய னென்றும்
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ர னென்றும்
மூதுலகி லிவ்வணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்ப தென்னோ

அரூலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எசு)

கவிஞன்.

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொரு
டெரிந்துரைசெய் திறமை யுடனே
விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரிவிலக் கண விகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்தியல்பு
மிக்கப்ர பந்த வண்மை
உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
யொத்ததிகச சபை கண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற்ப்ர சங்கம
துரைப்பவன் கவிஞ னுகும்
அள்ளிவிட முண்டகனி வாயனே நேயனே
யமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எரு)

நற்சார்பு.

காணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய் புண்ணியங் [ரு
கருணையா யவர்சொன்மொழி கேட்டிட லபிப்பதி
காதுசெய் திடுபுண் ணியம்
பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய் புண்ணியம்
பிழையாம லவர்தமைத் தொழுதிட லபிப்பதுகை
பெரிதுசெய் திடுபுண் ணியம்
வீணெறி செலாமலவர் பணிவிடை லபிப்பதுதன்
மேனிசெய் திடுபுண் ணியம்

விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்கபூ ருவபுண் ணியம்
ஆணவ மெனுங்களை களைந்தறி வினைத்தந்த
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எசு)

பிறந்தநாளோடு வருகிற வாரபலம்.

சென்ம நக்ஷத்திரத் தாதிவா ரம்வரிற்
றீரா தலைச்ச லுண்டாந்
திங்களுக் காகில்வெகு சுகபோ சனத்தினொடு
திருமாதி னருளு முண்டாம்
வண்மைதரு மங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாரது சுகம தென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனு
வாரத் துடன் கூடினால் [ம்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மை யுடனே வந்திடும்
நாரிய ருடன் போக மிகவுமுண் டொருவெள்ளி
நல்ல வாரத்தில் வந்தால்
அன்மருவு பீடையுண் டாமென்பர் சநியனுக்
கமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எஎ)

இதனையுடையவர்க் கிதுவில்லையெனல்.

பொன்னாசை யுள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ள பேர்க்குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
பொதுமாதர் விழி வலையிலே
எந்நாளு மலைபவர்க் கச்சமொடு வெட்கமே
தென்றென்று முறு கல்விமே
லிச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
வெளிதா யிருந்து கொண்டே

பன்னூறு மலைபவர்க் கிகழேது புகழேது
பாரி லொருவர்க் கதிகமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்நிரைய மொன் றுளதுகாண்
அன்னூணு வருகரி யுரித்தணியு மெய்யனே
யமலனை யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எஅ)

மழைநாட் குறிப்பு.

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேனல்ல
சீரான பரணி மழையுந்
தீதில் வைகாசியிற் பூரணை கழித்தபின்
சேரு நாலா நாளினில்
ஒத்துவரு மழையுவம் வானியிற் றேய்பிறையி
லோங்கு மேகா தசியினி
லொளிர்பரிதி வீழ்பொழுதின் மந்தார மும்மழையு
முண்டா யிருந் தாடியில்
பத்திவரு தேதியைந் தினிலாதி வாரமும்
பகரு மாவணி மூலநாள்
பரிதியு மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவு முண்டாம்
அத்தனே பைங்குவளை மாலையணி மார்பனு
மண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (எசூ)

இருந்து முதவாமை.

சமயத்தி லுதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழு திலாத கிளையேன்
சபைமுகத் துதவாத கல்வியே னெதிரிவரு
சமயத் திலாத படையேன்
விமலனுக் குதவாத பூசையே னுளமிருள்
வேளைக் கிலாத சுடரேன்

வெம்பசிக் குதவாத வன்னமே னீடுகுளிர்
வேளைக் கிலாத கலையேன்
தமதுதளர் வேளைக் கிலாதவோர் மனைவியேன்
சரசத் திலாத நகையேன்
சாமரண காலத்தி லுதவாத புதல்வனேன்
றரணிமீ தென்பர் கண்டாய்
அமரர்க்கு முனிவர்க்கு மொருவர்க்கு மெட்டாத
வாதியே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அ௦)

மறையோர் சிறப்பு.

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்று தப்பாது புரிவா
ருதயாதி யிற்சென்று நீர்படிகு வார்கால
மொருமூன்றி னுக்கு மறவா
தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளு
மதிதி பூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோப
மின்றியே செய்து வருவார்
பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யெனப் பெய்யுமுகி லவர்மகிமை யெவர்களும்
பேசுதற் கரிதரிது காண்
ஆரார் நெடுஞ்சடில வமலனே யெனையாளு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அக)

அரசர் சிறப்பு.

மநுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட
வருமதிக ரண வீரமும்
வான்விஜய மொடுசரச சாதன விசேஷமும்
வாசி மதகரி யேற்றமும்

கணமா மமைச்சரும் பலமான துர்க்கமுங்
கைகண்ட போர்ப் படைஞருங்
கஜரத பதாதியுந் துரகப்ர வாகமுங்
காலதேசங்க ளெவையும்
இனிதா யறிந்தஸ்தா னுபதிக ளொடுசமர்க்
கிளையாத தள கர்த்தரு
மென்றும்வற் றாததன தாளிய சமுத்திரமு
மேற்றமுள குடி வர்க்கமும்
அனைவோரு மெச்சவிங் கிவையெலா முடையபே
ரரசரா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அஉ)

வைசியர் சிறப்பு.

நீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவர்
நெடிது தூரந் திரிந்து
நினைவுதடு மாறூர்கள் சலியார்கள் பொருடேடி
நீணிலத் தரசு புரியும்
வாளுழவ ரைத்தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வராத விடமும்
மனதையு மறிந்துதவி யொன்றுநூ றாயிட
வளர்ப்பர்வரு துலை துலைக்கும்
ஆள்விடுவர் மலிவுகுறை வதுவிசா ரித்திடுவ
ரளவில் பற்பல சரக்கு
மமைவுறக் கொள்வர்விற் பார்கணக் கதிலனுவு
மறவிடார் செலவு வரிலோ
ஆளியொத் தேமலையி னளவுங் கொடுத்திடுவ
ரருள்வைசிய ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அங)

வேளாளர் சிறப்பு.

வசனுதி கருமமுந் தப்பாமல் வேதிய
ரியற்றிநல் லோர் பெறுவதும்

ராச்யபா ரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
டென்றுநல் லோர் பெறுவதும்
வசனூதி தப்பாது தனதானி யந்தேடி
வசியர்நல் லோர் பெறுவதும்
மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக
வளமைபெற் றோர் பெறுவதும்
திசைதோறு முள்ளபல தேவா லயம்பூசை
செய்யநல் லோர் பெறுவதுஞ்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர்
செய்யு மேழிப் பெருமைகாண்
அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அச)

தானுதிபதி, மந்திரி, சேனுதிபதிகளி னியல்பு.

தன்னரசர் வலுமையும் பாராச ரெண்ணமுஞ்
சாலமேல் வரு கருமமுந்
தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினேன்
றுனுதி பதியாகு வான்
மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும்
வாழ்குடி படைத் திறமையும்
மந்திரா லோசனையு மெல்லா மறிந்தவன்
வளமான மதி மந்திரி
துன்னிய படைக்குணங் கரிபரி பரீ கையுமே
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியுந்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனுதி பன்
அன்னையீ லு நல்லமலை மங்கைபங் காளனே
யனகனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அரு)

இராயசகருணீகர் சிறப்பு,

வருமோலை யுத்தரத் தெழுதிவரு பொருளினுல்
வரவிடுப் போன் மனதையும்

மருவிவரு கருமமுந் தேசகா லத்தையும்
வருகரத லாமலக மாம்
விரைவா யறிந்தரச ரெண்ணிலெண் ணினையள
விடவெழுத வாசிக்க வும்
வெற்றிகொண் டேபெரிய புத்தியுடை யோன்புவியின்
மேன்மை ராயச காரனும்
கருவா யறிந்துதொகை யீராறு நொடியினிற்
கடிதேற் றிடக் குறைக்கக்
கடுகையொரு மலையாக மலையையொரு கடுகுமாக்
காட்டுவோன் கருணீக னும்
அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அ௬)

கோபத்தின் கொடுமை.

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்குங்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுற வறுக்குங்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவ னுக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற் றள்ளுமால்
ஆபத் தெலாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளு
மண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (அ௭)

பல் துறை.

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர்
தங்களுக் கவை தழைவுறு

சற்றுமறி வில்லாம லந்தணரை நிந்தனைசெய்
தயலிலோ ராயுள் பெருகார்

மேன்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
வீடுநற் செந்நெ லிவைகள்
வேறொருவர் தந்திடினு மநுமொழி யறிந்தபேர்
விலைகொடுத் தேகொள்ளு வார்
தேன்கனி கிழங்குவிற கிலையிவை யனைத்தையுந்
தீண்டரிய நீச ரெனினுஞ்
சீர்பெற வளிப்பரே லிகழாது கைக்கொள்வர்
சீலமுடை யோரென்ப தால்
ஆன்கொடி யுயர்த்தவுமை நேசனே யீசனே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௮௮)

தத்துவத் திரயம்.

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்து மிந்திரிய மைந்து
பொருவில்கன் மேந்திரிய மைந்துமன மாதியாம்
புகலரிய கரண நான்கே
ஓதினோ ரிவையாத்ம தத்துவ மெனச்சொல்வ
ருயர்கால நியதி கலையோ
டோங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென்
றுரைசெய்யு மோ ரேழுமே
நீதில்வித் யா தத்வ மென்றிடுவ ரிவையலாற்
றிகழ்சுத்த வித்தை யீசன்
சீர்கொள்சா தாக்கியஞ் சத்திசிவ மைந்துமே
சிவதத்வ மென் றறைகுவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செ
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவவனே. (௮௯)

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியவும்.

வனசஞ் செழுஞ்சூத முடனசோ கந்தளவ
மலர்நீல மிவை யைந்துமே
மாரவேள் கணைகளா மிவைசெயுங் குணமுளரி
மனதி லாசையை யெழுப்பும்
வினவிலொண் சூதமலர் மெய்ப்பசலை யுண்டாக்கு
மிகவசோ கந்துயர் செயும்
வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலமுயிர் போக்கிவிடு
மேவுமிவை செயு மவத்தை
நினைவிலது வேநோக்கம் வேறொன் றிலாசையற
நெட்டுயிர்ப் பொடு பிதற்ற
னெஞ்சந் திடுக்கிடுத லனம்வெறுத் திடல்காய்ச்ச
னேர்தன் மௌனம் புரிகுதல்
அனையவுயி ருண்டில்லை யென்னலீ ரைந்துமா
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௦)

மன்மத னுபகரணங்கள்.

வெஞ்சிலை செழுங்கழைவி னாரிகரு வண்டின
மேல்விடுங் கணைகளலராம்
வீசிடுந் தென்றறேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங் கெடாத விருளாம்
வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாணெடிய
வண்மைபெறு கடன் முரசமாம்
மகரம் பதாகைவரு கோகிலங் காகளம்
மனதே பெரும் போர்க்களம்
சஞ்சரிகை விசைபாடல் குமுதநே யன்கவிகை
சாரிரதி யேமனைவி யாந்
தறுகண்மட மாதரிள முலைமகுட மாமல்கு
றவரு திருக்குமிடமாம்
அஞ்சுகணை மாரவேட் கென்பரெளி யோர்க்கெலா
மமுதமே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௧)

பகைகொளத் தகாதவர்.

மன்னவ ரமைச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு
மாறுத மர்ம முடையோர்
வலுவர்கரு ணீகர்மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திர வாதியர்
சொன்னமுடை யோர்புலைய ருபதேச மதுசெய்வோர்
சூழ்வயித் தியர் கவிதைகள்
சொற்றிடும் புலவரிவர் பதினைந்து பேரொடுஞ்
சொற்பனந் தனி லாகிலும்
நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
நானிலத் தென்பர் கண்டாய்
நாரியோர் பாகனே வேதாக மம்பரவு
நம்பனே யன்பர் நிதியே
அன்னமூர் பிரமனுங் கண்ணனுங் காணாத
வண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௨)

இதாகிதஞ்செய்து பயன்கொள்வன.

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லுநன் னெல்லை யெள்ளைத்
தூயதெங் கின்கனியை யெண்ணாத துட்டரைத்
தொண்டரைத் தொழு தொழும்பை
நவைதீரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவி வாணரை
நலமிக்க செழுமலரை யோவிய மேனத்தக்க
நயமுள்ள நாரியர் தமைப்
புவிமீதி லுபகார நெஞ்சாரைச் சிறுவரைப்
போர் வீரரைத் தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்ய மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர் கண்டாய்
அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்ட வள்ளலே
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௩)

தருமம்.

பெறுமில்பெறு வித்தலொடு நாளோலை நாடொறும்
　　பிள்ளைக ளருந்திடும் பால்
　பேசரிய சத்திர மடமா வுரிஞ்சுகல்
　　பெண்போக நாவிதன் வண்ணான்
மறைமொழிக ளுடிதண் ணீர்தலைக் கெண்ணெய்பசு
　　வாயினுறை பிண மடக்கல்
　வாவியிறு முயிர்மீட்ட றின்பொரு ளடைக்காய்
　　வழங்கல் சுண்ணும் புதவுதல்
சிறையுறு பவர்க்கமுது வெற்றிலங் காத்தல்பொழில்
　　செய்தன்முன் ஞூலின் மணங்
　திகழ்விலங் கூண்பிச்சை யறுசமய ருக்குண்டி
　　தேவ ராலய மவுஷதம்
அறைதல்கற் போர்க்கன்ன நாலெட் டறங்களுமு
　　னன்னைசெய லருமை மதவே
　ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
　　ரறப்பளீ சுர தேவனே. (௯௭)

இல்லறம்.

தந்தைதா சற்குருவை யிட்டதெய் வங்களைச்
　　சன்மார்க்க முள மனைவியைத்
　தவறாத சுற்றத்தை யேவாதமக்களைத்
　　தனைநம்பி வரு வோர்களைச்
சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
　　தென்புலத் தோர் வறிஞரைத்
　தீதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத்
　　தேனுவைப் பூசுரர் தமைச்
சந்ததஞ் செய்கடனை யென்றுமிவை பிழையாது
　　தான்புரிந் திட வில்லறஞ்
　சாறுநல முடையராந் துறவறத் தோருமிவர்
　　தம்முடன் சரியா யிடார்
அந்தரி யுயிர்க்கெலாந் தாய்தனிலு நல்லவட்
　　கன்பனே யருமைமதவே

ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே: (௬௫)

புராணம்.

தலைமைசேர் பௌடிக மிலிங்கமார்க் கண்டமெழில்
சாரும் வாமன மச்சமே
சைவம் பெருங்கூர்மம் வருவரா கங்காந்த
சரிதமே பிர மாண்டமும்
நிலைமைசேர்ப்பத்து முயர்சில புராணமா
நெடியமால் கதை வைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடியபுராண நான்காம்
தலைவலர்சொல் பதுமமொடு பிரமகை வத்தமே
கமலா லயன் காதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணமாங்
கனல்காதை யாக்கி னேயம்
அலைகொண்ட நதியும்வெண் மதியுமறு கும்புனையு
மத்தனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௬௬)

புகழ்ச்சி.

பருகாத வமுதொருவர் பண்ணாத பூஷணம்
பாரின் மறையாத நிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கே ருகம்
கருகாத புயல்கலைக ளருகாத திங்கள்வெங்
கானி லுறையாத சீயங்
கருதரிய விக்குண மனைத்துமுண் டானபேர்
காசினியி லருமை யாகும்
தெரியவுரை செய்யின்மொழி கீர்த்திவரு கல்வியோடு
சீரிதய மீகை வதனந்
திடமான வீரமிவை யென்றறிகு வார்களிச்
செகமெலாங் கொண்டாட வே

அருள்கற்ப தருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகுமெம தருமை மதவே
ள.னுதினமு மனதினனே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௭)

திருமா லவதாரம்.

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தது மற்சமாஞ்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் யாய்போற்
சுருட்டி மாநில மெடுத்தே
போமிரணி யாக்கதனை யுயிருண்ட தேனமாம்
பொல்லாத கனக னுயிரைப்
போக்கியது நரசிங்க முலகளந் தோங்கியது
புனிதவா மன மூர்த்தியாம்
ஏழுறு மிராவணனை வென்றவ னிராகவ
னிரவிகுலம் வே ரறுத்தோ
னேர்சாசி ராமன்வரு கண்ணனொடு பலராம
னிப்புவி பயந் தவிர்த்தோர்
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்து
மரிவடிவ மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (௯௮)

சிவமூர்த்தி.

பிறைசூடி யுமைநேசன் விடையூர்தி நடமிடும்
பெரியனுயர் வதுவை வடிவன்
பிச்சாட னன்காம தகனன்மறை லியைவென்ற
பெம்மான் புரந் தகித்தோன்
மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வௌவினேன் வீரே சுரன்
மருவுநர சிங்கத்தை வெறவர னுமைபாகன்
வனசரன் கங்கா ளனே

விறன்மேவு சண்டேச ரக்ஷகன் கடுமாந்தி
மிக்கசக் கர முதவினேன்
விநாயகற் கருள்செய்தோன் குகனுமை யுடன்கூடி
மிளரேக பாதன் சுகன்
அறிவரிய தக்ஷிணா மூர்த்தியொ டிலிங்கமா
மையனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே. (கூகூ)

கவி வணக்கம்.

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக்கொழுந் துயர் கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரஞ் சிலசூடி
மணிமுடி தனிற் பொறுத்தே
சிலரெருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர் சூடவே
சித்தம்வைத் திடவுமங் கீகரித் திடுமகா
தேவ தேவா தெரிந்தே
கலைவல ருரைக்குநன் கவியொடம் பலவாண
கவிராய னாகு மென்புன்
கவியையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனாகு மடனாக மும்
அலைபெறு கங்கையுஞ் செழுமதிய மும்பு
மமலனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவ
ரறப்பளீ சுர தேவனே. 0)

அநப்பளீ சுரசதகம்

முற்றிற்று.

அம்பலவாணன் அடியிணைவாழ்க.